இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 26-09-2023

# பாசிச பாணி பேச்சு

பாசிச பேச்சு என்பதற்கு உதாரணம் வேண்டுமா? பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பிதுரி பேச்சுதான் அதற்கு சரியான சமீபத்திய உதாரணம்.

**இந்திய நாட்டின் நாடாளுமன்றத்தில், நாடாளுமன்ற உறுப்பினரையே தகாத வார்த்தைகளால் பேசுகிறார் ரமேஷ் பிதுரி. இந்தத் துணிச்சலை அவருக்குக் கொடுத்தது யார்? அப்படி அவர் பேசும் போது பல்லைக் காட்டிச் சிரிக்கிறார்கள் ஒன்றிய அமைச்சர்கள். கூச்சமோ, அருவெறுப்போ அவர்களுக்கும் இல்லை.**

சந்திரயான் - 3 வெற்றி குறித்த விவாதம் நாடாளுமன்றத்தில் நடக்கிறது. தெற்கு டெல்லியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பா.ஜ.க. எம்.பி. யான ரமேஷ் பிதுரி, அம்ரோஹாவில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பகுஜன் சமாஜ் கட்சி எம்.பி. அன்வர் டேனிஷ் அலிக்கு அளித்த பதிலில், நாட்டின் மிகப்பெரிய சிறுபான்மை சமூகத்தை நோக்கி அநாகரிகமான, வகுப்புவாத வெறுப்பு நிறைந்த வார்த்தைகளைப் பயன்படுத்தினார். அதுமட்டுமின்றி, அவையை விட்டு வெளியே வந்தபின் ‘பார்த்துக் கொள்வதாகவும்’ மிரட்டியுள்ளார். உறுப்பினரையும் அவர் சார்ந்த மதத்தையும் கொச்சைப்படுத்தி தரக் குறைவாகப் பேசினார்.

அப்போது, சபை நடவடிக்கைகளைத் தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருந்த சபாநாயகர் கொடிக்குன்னில் சுரேஷ், பிதுரியை தடுக்க முயன்றார். ஆனால் பிதுரி சர்ச்சைக்குரிய வார்த்தைகளை மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டே இருந்தார். பிதுரி இதைச் செய்து கொண்டிருந்தபோது, அவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த முன்னாள் சுகாதார அமைச்சர் டாக்டர் ஹர்ஷ்வர்தனும், அவருக்குப் பின்னால் அமர்ந்திருந்த முன்னாள் சட்ட அமைச்சர் ரவிசங்கர் பிரசாத்தும் அவர் பேசுவதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர். ஆளுங்கட்சியைச் சேர்ந்த சில எம்.பி.க்களும் மேசையைத் தட்டி பிதுரியை உற்சாகப்படுத்தினர்.

பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், நாடாளுமன்ற விவகார அமைச்சர் பிரஹலாத் ஜோஷி மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்டோர் பிதுரியை தடுக்க முயற்சிக்கவில்லை. பிதுரியின் நடத்தைக்கு ஒட்டு மொத்த எதிர்க்கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்து அவர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியபோது, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், வேண்டா வெறுப்பாக ஆழ்ந்த வருத்தம் தெரிவித்தார். “உறுப்பினர் பிதுரி என்ன பேசினார் என்பதை என்னால் சரியாக கேட்க முடியவில்லை. அவரது வார்த்தைகளால் எதிர்க்கட்சிகள் புண்பட்டிருந்தால் நான் வருத்தம் தெரிவிக்கிறேன்,” என்று கூறினார் ராஜ்நாத் சிங். இன்னும் அவரை ஏன் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர் நிரூபித்தார்.

**அதாவது நாடாளுமன்றத்தையே பா.ஜ.க.வின் கட்சித் தலைமையகம் போல நினைத்துக் கொண்டு பேசுகிறார்கள் பா.ஜ.க. எம்.பி.க்கள்!**

**கொச்சையாகப் பேசிய பா.ஜ.க. உறுப்பினருக்கு இந்த அவையில் எத்தகைய உரிமை உண்டோ அதே உரிமை பகுஜன் சமாஜ் கட்சி உறுப்பினருக்கும் உண்டு. ஆனால் அவரை அநாகரிகமாக - அவமானப்படுத்தும் வகையில் பேசினார் பா.ஜ.க. எம்.பி.யான ரமேஷ் பிதுரி.**

நாடாளுமன்றத்தில் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த எம்.பி. ஒருவரை, பா.ஜ.க. எம்.பி. ஆபாசமாகவும் அச்சில் பதிவேற்ற முடியாத வார்த்தைகளாலும் பேசியது நாடுமுழுவதும் கண்டனத்திற்குள்ளாகியுள்ளது. அவர் சார்ந்த மதத்தைச் சொல்லி தீவிரவாதி என்றும் அச்சில் ஏற்ற முடியாத வார்த்தைகளையும் சொல்கிறார் பா.ஜ.க. எம்.பி. இது நடந்தது தெருவில் அல்ல. நாடாளுமன்றத்தில். இந்திய நாட்டின் இதயமான நாடாளுமன்றத்தில்.

**பா.ஜ.க. எம்.பி. ரமேஷ் பிதுரியை இடைநீக்கம் செய்யக் கோரி மக்களவை சபாநாயகருக்கு மக்களவைக் கழகக் குழு துணைத் தலைவர் கனிமொழி கடிதம் எழுதியுள்ளார். நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரின் போது, மக்களவையில் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரியும், ராஜ்யசபாவில் ஆம் ஆத்மி எம்.பி. சஞ்சய் சிங்கும், இருக்கையில் இருந்து எழுந்து நின்று மணிப்பூர் பிரச்சினை குறித்து பிரதமரிடம் விளக்கம் கேட்டு சபாநாயகர் முன் செல்ல முயற்சித்தபோது, அவர்கள் இருவரும் அந்த அமர்வு முழுவதும் இடைநீக்கம் செய்யப்பட்டனர். அதை விட மிகமிக மோசமானதுதான் பா.ஜ.க. எம்.பி. செய்தது ஆகும். நடவடிக்கை எடுப்பாரா சபாநாயகர்?**

பா.ஜ.க. எம்.பி. ரமேஷ் பிதுரி பேசியது, பா.ஜ.க.வினரை தவிர்த்து பிற கட்சியினர் அனைவரையும் முகம் சுளிக்க வைத்தது. இது ரமேஷ் பிதுரிக்கு புதியது அல்ல. அவர் இப்படி பேசுவது இது முதல் முறை அல்ல. டேனிஷ் அலியை பேசியது போன்று பல மக்கள் பிரதிநிதிகளையும் பா.ஜ.க. எம்.பி. ரமேஷ் பிதுரி தொடர்ந்து இதுபோன்ற வகையில் பேசியுள்ளார்.

* கடந்த மாதம் டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலை குள்ளன் என்று பேசியிருக்கிறார்.

* மே 2019 இல், தெற்கு டெல்லியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய பிதுரி டெல்லி முதல்வர் கெஜ்ரிவாலை தகாத வார்த்தைகளால் திட்டியதற்காக ஆம் ஆத்மி எம்.பி. ராகத் சதா வழக்கு தொடர்ந்திருக்கிறார்.

* 2017 இல், மதுராவில் பேசிய பிதுரி இத்தாலியில் 5-6 மாதங்களில் பேரக்குழந்தை பிறக்கலாம் என சோனியா காந்தியையும், இது மாதிரியான கலாச்சாரம் மாயாவதியின் வீட்டிலோ கூட இருக்கலாம், என மாயாவதியையும் அவமானப்படுத்தி பேசியிருக்கிறார்.

* 2015 இல், ரஞ்சீத் ரஞ்சன், சுஷ்மிதா தேவ், சுப்ரியா சுலே, அர்பிதா கோஷ், பிகே ஸ்ரீமதி டீச்சர் உட்பட 5 பெண் எம்.பி.க்கள். மக்களவையில் தங்களுக்கு எதிராக தவறான மற்றும் பாலியல் கருத்துக்களைப் பிதுரி பயன்படுத்தியதாக குற்றம் சாட்டியிருக்கிறார்கள்.

* 2022 ஆம் ஆண்டில் பள்ளி தொடர்பான பிரச்சினையில் உதவி கேட்ட ஒரு பெற்றோரிடம் “நீங்கள் ஏன் முதலில் குழந்தையைப் பெற்றெடுக்கிறீர்கள்?” என கேட்டுள்ளார்.

இப்படி ஆபாசமாக - ஆணவமாகப் பேசுவதையே தனது வழக்கமாக - பழக்கமாகக் கொண்டுள்ளவர்தான் இந்த ரமேஷ் பிதுரி.

**இப்போது அவமானப்படுத்தப்பட்ட டேனிஷ் அலி எம்.பி.யால் ஊடகங்கள் முன் எந்தப் பதிலும் சொல்ல முடியவில்லை. கண்கலங்கினார். தனது கண்ணீரையே பதிலாகக் காட்டினார்.**

**எல்லா கண்ணீர்களுக்கும் கோபங்களுக்கும் பதில் சொல்லும் காலம் நெருங்கிக் கொண்டுதான் இருக்கிறது.**

●●

## உடல் உறுப்புகளை தானமாக வழங்குவோரின் இறுதிச் சடங்குகளுக்கு அரசு மரியாதை!

# அனைத்துத் தரப்பினரும் பாராட்டு!

**உடல் உறுப்பு தானம் செய்வோரின் இறுதிச் சடங்குகள் இனி அரசு மரியாதையுடன் நடைபெறும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த சனிக்கிழமை 23.9.2023 அன்று அறிவித்தவுடன், சமூகத்தில் பரவலாக உள்ள அனைத்துத் தரப்பினரிடம் இருந்து பாராட்டுகள் குவிந்தவண்ணம் உள்ளன.**

## மனித நேயமிக்க திராவிட மாடல் அரசு!

### முதல்வருக்கு பேராசிரியரின் புதல்வர் அ.அன்புச்செல்வன் பாராட்டுக் கடிதம்!

சென்னை, செப். 26-

உடலுறுப்பு தானம் செய்வோரின் மறைவுக்கு அரசு சார்பில் இறுதி மரியாதை செய்யப்படும் என்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின் மூலம் இந்த திராவிட மாடல் அரசு மனித நேயமிக்க அரசாக விளங்குகிறது என்று பாராட்டி பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச் செல்வன் அவர்கள் முதல்வருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது கடிதம் வருமாறு:-

அன்புச் சகோதரர் தலைவர் முதல்வர் ஸ்டாலின் அவர்களே,

இனிய வணக்கம்,

நேற்றைய தினம் (23.9.2023) உடல் உறுப்பு தானம் செய்பவர்களின் மறைவுக்கு பின்னர் அவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில், அவர்களது மறைவுக்கு அரசு மரியாதையுடன் இறுதி மரியாதை செய்யப்



படும் என்ற தங்களின் அறிவிப்பு மனித நேயத்தின் மீது தாங்கள் கொண்டிருக்கும் அன்பின் வெளிப்பாடே. மனிதநேயமிக்க அரசாக திராவிட மாடல் அரசு விளங்குகிறது.

வாழ்க உங்கள் தொண்டுள்ளம்,

வளர்க வெல்க திராவிட மாடல் அரசு!

இவ்வாறு அந்தக் கடிதத்தில் அ.அன்புச்செல்வன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## நாட்டிற்கே தமிழ்நாடு முன்னுதாரணமாகத் திகழ்கிறது!

### இந்திய கம்யூனிஸ்ட் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அறிக்கை!

சென்னை, செப். 26-

உடல் உறுப்பு தானம் செய்தவர்களின் மறைவுக்கு அரசு மரியாதையுடன் இறுதி நிகழ்வுகள் நடத்தப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு, நாட்டிற்கே தமிழ்நாடு முன்னுதாரணமாகும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அவர்கள் பாராட்டியுள்ளார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் இரா.முத்தரசன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை



வருமாறு:-

முதல்வரின் முன்னுதாரண முயற்சியை வரவேற்கிறோம்.

தம் உடல் உறுப்புகளை ஈந்து பல மனித உயிர்களை காப்போரின் தியாகத்தினை போற்றிடும் வகையில் இறக்கும் முன் உறுப்பு கொடை வழங்குவோரின் இறுதி நிகழ்வுகள் இனி அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருப்பது நாட்டின் முன்னுதாரண முயற்சி என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு வரவேற்கிறது.

உடல் உறுப்பு கொடையின் மூலம் பல நூறு பேருக்கு வாழ்வளிக்கும் அரும் பணியில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணியில் உள்ளது.

மூளைச்சாவு அடைந்த துயரச் சூழலிலும் அவர்களின் உடல் உறுப்புகளை கொடையாக அளிக்க முன்வரும் குடும்பங்களின் தன்னலமற்ற தியாகங்களால்தான் மேற்கண்ட சாதனைகள் சாத்தியமாகிறது.

உடல் உறுப்புதானம் என்பதின் அவசியம் மேன்மேலும் உணரப்பட மக்கள் நல்வாழ்வுத் துறை, மருத்துவத்துறை தமிழக அரசின் கீழ் எடுக்கும் முயற்சிகள் மேன்மேலும் தொடரட்டும்.

இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## முதலமைச்சரின் அறிவிப்பு விழிப்புணர்வை பரவலாக்கும்!

### மக்கள் நீதி மையம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் பாராட்டு!

சென்னை, செப். 26-

உடல் உறுப்பு தானம் வழங்குவோரின் இறுதிச்சடங்கு அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும் என்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பை வரவேற்பதாக மக்கள் நீதி மையம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கமல்ஹாசன் அவர்கள் வெளியிட்டுள்ள சமூகவலை தள பதிவில் கூறி யிருப்பதாவது:-

பிரியத்திற்குரிய குடும்ப உறுப்பினர் மூளைச்சாவு அடைந்த துயர நிலையிலும், அவரது உடல் உறுப்புகளைத் தானம் செய்து பிற உயிர்களைக் காக்க முன்வருவது மகத்தான தியாகம் என்று தெரிவித்துள்ளார். இந்தத் தியாகத்தைப் போற்றிடும் வகையில் உடல் உறுப்பு தானம் வழங்குவோரின் இறுதிச்சடங்கு அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும் என்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிவிப்பு உடல் உறுப்பு தானம் குறித்த



விழிப்புணர்வை பரவலாக்கும் என்றும் கமல்ஹாசன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## இதைவிட சிறப்புமிகு மரியாதையை யாராலும் அளிக்க முடியாது!

### முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் பாராட்டு!

சென்னை, செப். 26-

உடல் உறுப்புகளை தானமாக வழங்குபவர்களின் இறுதிச்சடங்குகள் அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும் என்ற முதல்வரின் அறிவிப்புக்கு பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், கூறியிருப்பதாவது:-



தமிழ்நாட்டில் விபத்துகளில் சிக்கி அல்லது உடல்நலம் பாதிக்கப்பட்டு, மூளைச்சாவடைந்த நிலையில், உயிரிழப்பதற்கு முன் உடல் உறுப்பு தானம் செய்பவர்களின் இறுதிச்சடங்குகள் அரசு மரியாதையுடன் நடத்தப்படும் என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருக்கிறார். இது பாராட்டப்பட வேண்டிய மிகச்சிறப்பான நடவடிக்கை ஆகும். தன் உறுப்புகளை கொடையாக வழங்கி, பல உயிர்களைக் காக்கும் ஈகியர்களுக்கு இதை விட சிறப்பான மரியாதையையும், அங்கீகாரத்தையும் அளிக்க முடியாது.

உடல் உறுப்புக் கொடை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 13ஆம் நாள் உலக உறுப்புக் கொடை நாளாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதேபோல், தமிழ்நாட்டில் ஹிதேந்திரனின் உடல் உறுப்புகள் கொடையாக வழங்கப்பட்ட செப்டம்பர் 23ஆம் நாளை தமிழ்நாடு உடல் உறுப்புக் கொடை நாளாக அறிவிக்க தமிழக அரசு முன்வர வேண்டும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

## முதல்வரின் அறிவிப்புக்கு நடிகர் பார்த்திபன் பாராட்டு!

சென்னை, செப். 26-

உடல் உறுப்பு தானத்தில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணி வகித்து வருவதையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்திருந்த சமூக வலைதளப் பதிவில், உடல் உறுப்பு தானம் செய்வோரின் இறுதிச் சடங்குகள் - இனி அரசு மரியாதையுடன் நடைபெறும் என அறிவித்திருந்தார்.

முதல்வர் அவர்களின் இந்த அறிவிப்புக்கு அனைத்துத் தரப்பினரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

நடிகரும், கவிஞருமான பார்த்திபன், முதல்வரின் இந்த அறிவிப்புக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

அவர் தமது பதிவில், நமது முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிற, உடல் உறுப்பு தானம் செய்கிறவர்களுக்கு அவர்களுடைய இறுதிச் சடங்குகள் அரசு மரியாதையுடன் நடத்தப்படும் என்பது மிகவும் பாராட்டுக்குரிய விஷயம்.

கலைஞர் அவர்கள் கையால் வெளியிடப்பட்ட ‘கிறுக்கல்கள்’ என்ற புத்தகத்தில், ‘உடல் உறுப்பு தானம்’ பற்றி ஒரு நீண்ட கவிதை எழுதியிருக்கின்றேன்.



‘இரவு நிழல்’ எனும் படத்தில் கூட, “இறப்பே இல்லாமலே இருப்பாய்; நீ இருப்பாய் - எப்படியென்றால், உடல் தானம் செய்துவிட்டால், உன் உறுப்புகள் எல்லாம் வேறு ஒருவர் உயிருக்குள் இருக்கும்” என்றெல்லாம் நான் எழுதியிருக்கின்றேன்.

இதுபற்றி நீண்ட காலமாக நான் வலியுறுத்தி வந்திருக்கின்றேன். இப்படி ஒரு விஷயமே இல்லாத போதே, நானும், எனது மனைவியும் சென்று மலர் மருத்துவமனையில் உடல் தானம் செய்திருக்கிறோம்.

இவ்விஷயத்தைப் பற்றி தங்களுடன் உடனடியாக பகிர்ந்து கொள்ள வேண்டும் எனது ஆசைப் பட்டேன். மிகவும் நன்றி. என்று குறிப்பிட்டுள்ளார்.